பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

426

# தென்மொழி

கிழமை வெளியீடு:- சான்றுண்மை இதழ்.

1 NOV 1953

ஆசிரியர் : இளவழகனார்.

௧—கலை தந்தநலக், மாம்பாக்கம்; விசய, புரட்டாசு; 2—10—53 தளிர்—53


குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## காயும் கனியும்

காயைவிடக் கனி சுவையுள்ளது, நலமுந் தருவது! பழம் என்றால், எல்லாருக்கும் விருப்பமும மகிழ்ச்சியும் உண்டாதலும் இயல்பு!

விருப்பத்துக்கும் மகிழ்ச்சிக்குங் காரணம் பழத்தின் சுவையும் நலமுமே என்பது தெளிவு. ஆகவே, ஒவ்வொரு பண்டத்திலும் இருவகைப் பயன் இருக்கவேண்டும் என்று இதிலிருந்து தெரிகின்றது. ஒன்று தன்மை நலம், மற்றொன்று அதன் கவர்ச்சி நலம்!

பொருளுலகம் முழுதும் இவ்வாறே ஏதேனும் அகநலமும் புறநலமும் உடையதாகவே இருக்கும்; சில மிகுதியாகவும் சில குறைவாகவும் உடையன. இவ்வாறே சொல்லுலகமும் இருவகை நலனும் உடையது. ஒன்று சொற்சுவை; மற்றொன்று அதன் கருத்துச் சுவை; சொற்சுவை, கேட்க இனிதாயிருக்கும்; கருத்துச் சுவை, பயனால் இனிதாயிருக்கும். இவ் விருவகைச் சுவையும் சேர்ந்த சொற்களே இன்சொற்கள் எனப்படுவன. இவ்விருவகை இனிமையும் அமையாத சொற்கள், வன்சொற்களாகும். இத்தகு இன்சொற்கள் அறவுரைகளெனப்படும்; அல்லாதன மறவுரைகளாகும்.

மேற்காட்டிய உண்மைகள் உடைய இன்சொல் வன்சொல் என்பன அவரவர் தகுதிக்கேற்றபடி அவரவரிடமிருந்தே தோன்றுகின்றன, கனியும் காயும் ஒரு மரத்திலிருந்தே தோன்றுதல் போல!

நல்லோர் இன்சொல் வழங்குவர்; அல்லாதவர் வன்சொல் வழங்குகின்றனர் காய் தோன்றினும் அதனைக் கனியவைத்து உண்ணுதலன்றே நல்லது! கனிய வைத்தற்கு நற்குணம் என்னும் திருவருள் வேண்டும்.

இங்ஙனம் காயெல்லாம் கனியெனக் கனிவிக்கும் வகையில் பக்குவமுறுதற்குமுன், காயையே வழங்கிவிடல் ஆகாது. கனியாகும் உண்மையை அறிந்திருந்தும் விரைந்து காயை நுகர்வோர் எத்தகையர்? இனிய உளவாக இன்னாத கூறல் இங்ஙனம் கனி இருப்பக் காய் கவர்ந்த இலேதான்! கனிவு பெற்று இனிய கூறுதற்கு விரும்புதலே தக்கது!

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனியஉளவாகஇன்னாதகூறல்- இன்சொற்கள் இருக்க இனிய வல்லாத சொற்களைச் சொல்லுதல், கனி இருப்பக் காய் கவர்ந்தற்று—இன்சுவைக் கனிகள் இருக்கக் கடிய காய்கள் நுகர்வதை ஒக்கும்.

உளவாக-சொல்வதற்குத்தன்னிடம் இருக்க; கூறல் என்றதனால், இனிய இன்னாத என்பன சொற்களை உணர்த்தின. இனிய- அறம் பயத்தலால் இனிய; இன்னாத-மறம்பயத்தலால்இன்னாதன.

கவர்தல்—கவர்ந்து நுகர்தல்; கவர்ந்து அற்று—கவர்ந்தாற் போன்றது.

கனிகளும் காய்களும் பிற எல்லையில் இருப்பினும் அவற்றிற் காய்களை விடுத்துக் கனிகளை விரும்பி ஏற்றல் இயல்பாயிருக்க, ஒருவன் தன் எல்லையிலேயே அவை இருப்ப அவற்றில் கனிகளை விடுத்துக் காய்களை ஏற்றல் எவ்வளவு ஏமாற்றந் தருவதோர் அறியாமை என்று இரங்கினர். இனிய இன்னாத சொற்கள் அவரவர் எல்லையில் உள்ளனவாதலின், இன்னாத கூறல் பெரியதோர் ஏமாற்றமாயிற்று.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | விசய, புரட்டாசி, | தளிர் |
|---|---|---|
| 5 | 2-10-53 வெள்ளி | 53 |

## வேலையின்மை

இவ்வாண்டு உரிமை நாளைப் பொது உடைமையர், வேலையின்மையைக் குறிக்கும் நாளாகக் கொண்டாடினர். பல கட்சியாளரும் இதைப்பற்றிக் கிளர்ச்சிகள் செய்தனர். இவற்றின் பயனாக வேலையின்மையைப் போக்குவதைப்பற்றி நாட்டில் ஒரு பரபரப்பு உண்டாகி விட்டது. மக்கள் பெருக்கம், மழையின்மை, உடலுழைப்பைத் தாழ்வாக எண்ணுவது, நகர வாழ்க்கையில் விருப்பம், வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவும் கல்வி முறை இன்மை முதலிய பல காரணங்கள் வேலையின்மைக்குக் காட்டப்படுகின்றன.

மக்களுக்கு மிகுதியான வேலைகளைக் கொடுக்கக்கூடிய முறையில் ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்தியமைக்கக் கூட்டக ஆட்சி முயன்று வருகிறது. வேலையின்மைக்கு உதவியாக ரூ. 50 கோடி ஒதுக்கப்படக் கூடுமென்றும் தெரிகிறது. நாட்டு வளர்ச்சிக் குழு கூடுமுன் (அக்டோபர் 6ம் நாள்) வேலையின்மையைப் போக்கக் கூடிய உருப்படியான திட்டங்களை அனுப்பும்படி நாட்டு ஆட்சிகளையும், அமைச்சர்களையும் கூட்டக ஆட்சி கேட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினரால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் இக் குறையைப் போக்கக் கூட்டக ஆட்சி சுணக்கமின்றி முயற்சிகளைத் தொடங்கியிருப்பது போற்றக் கூடியதாகும்.

போபால் ஆட்சி வேலையின்மையைப் போக்க நிலப் படையை நிறுவப்போகிறது. இதன்படி காடு வெட்டி நிலத்தைப் பண்படுத்தவும், ஏரி குளம் கிணறுகளை வெட்டவும், மாத ஊதியத்திற்கு உழவர்கள் அமர்த்தப்படுவர். சில ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் 15 ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்படுவர். இது ஒரு சிறந்த திட்டம். வேலையில்லா மக்களை இவ்வாறு நிலைக்க வைப்பதைவிட ஆட்சி, செய்யக் கூடிய நன்மை பிறிதில்லை.

மற்ற மாகாணங்களைவிடச் சென்னை மாகாணத்தில் படித்து வேலையில்லாதிருப்பவர் மிகுதி என்று கூறப்படுகிறது. அவர்களுள் மனுச் செய்து கொண்டவர்கள் 32,000 பேர். மனுப் போடாதவர்களின் தொகை இதைவிட மிகுதியாகவும் இருக்கக் கூடும். படியாத வேலையில்லாதிருப்பவர் தொகை மிகப் பெரிது.

தமிழ் நாட்டை வாழவைக்கும் வற்றாத ஆறு, ஒன்றுதான் இருக்கிறது. அந்தக் காவிரியாற்றின் நீர் முழு அளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் உழவுக்காக அதன் நீரைப் பயன்படுத்த இயலாதென்றும், அண்மையில் கூடிய பொறியியலாளர் கூட்டத்தில் ஓரறிஞர் தெரிவித்திருக்கிறார். மற்ற ஆறுகள் பெரும்பாலும் உலர்ந்திருப்பவையே. வடாற்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களில் வானம் பார்த்த மேட்டு நிலங்களே மிகுதி. வானமோ குறித்த காலங்களில் வேண்டிய அளவு வாரியை வழங்குவதாய் இல்லை. இந்த நிலையில் தமிழ் நாட்டில் உழவைப் பெரிய அளவுக்கு வளர்க்கும் வாய்ப்பு அவ்வளவாக இல்லை.

தமிழர்கள், வேலையின்மையைப் போக்கிக் கொள்ள வேண்டுமானால், மக்களுக்குத் தேவையான பொருள்களை உண்டாக்கும் தொழிலகங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். தொழில் திறமையும், புகிது கண்டு பிடிக்கும் கூர்த்த மதியும், இயற்கை அன்னை தரும் மூல பண்டங்களும் தமிழர்களுக்கு இல்லாமலில்லை. நெய் வேலியும், சேலமும் இதற்கு எடுத்துக் காட்டுகள். நெய் வேலியில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருக்கிறது. நிறம், (Paint) 'வார்னிஷ்'களுக்குப் பயன்படும் ஒருவகை மெழுகும் 'தார்' முதலிய துணைப் பண்டங்களும் கிடைக்கின்றன. மாதிரிக் கரி எடுப்பு, வளர்ச்சிக்கான நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. முழு அளவுக்குக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# திருக்குறள் உயிர்ப்பு

[மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் 12ம் ஆண்டுவிழா 3ம் நாளில் (3-7-53 ல்) சிவத்திரு. திருவள்ளுவர் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரியசுவாமிகள் வாழ்த்துரை வழங்க, உயர்திருவாளர் கருமுத்து. தியாகராச செட்டியார் அவர்கள் தலைமை ஏற்க, ஆசிரியரவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.]

மதுரைக்கு இருபெருங் கண்களெனத் திகழ்கின்ற சைவத் துறைக்கும் தமிழ்த் துறைக்கும் ஏற்ற தலைவர்களான (மேற்கூறிய) இருவர்க்கும், குறள் நலத்தில் ஈடுபட்டு இவ்வளவு பேராக இறைவன் திருவடி நீழலில் (சோமசுந்தரப் பெருமான் திருக்கோவிலில்) இருந்து கொண்டு நுகரும் அனைவர்க்கும் அடியேன் பணிவு!

குறளைமட்டுமன்று, எதையுமே அனுபவிக்கும் உணர்வுதான் சிறந்தது. குறள் முழுதும் அப்படியே அநுபவிக்க வேண்டும் என்ற கருத்தில் திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுள் வருகின்றதல்லவா? அந்தப் ப்பாடல் அடியேனுக்கு நிரம்பப் பிடிப்பு. உங்களுக்கும் அப்படித்தான் இருக்கும்.

நல்ல நீர் நிறைந்துள்ள குளத்தில் ஆர நீராடுவோரின் உடம்பு குளிர்ந்திருக்கும்; உள்ளமுங் குளிர்ந்திருக்கும். ஆதலால், அந்நேரத்தில் தண்ணீரை எடுத்துப் பருக விரும்பமாட்டார்கள். இதுபோலவே குறள் என்னும் நிலையத்தில் அப்படியே அநுபவ வயமாய் மூழ்கியிருப்போர், அதிலே ஒரு குறளை எடுத்து அறிவால் ஆராய்ந்துகொண்டிருக்கமாட்டார்கள். இப்படிச் சொன்னவர் நாகன் தேவனார். அவர் பாடல் இது:—

"தாளார் மலர்ப்பொய்கை
தாங்குடைவார் தண்ணீரை
வேளாதொழிதல்
வியப்பன்றே—வாளாதாம்
அப்பால் ஒருபாவை
ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழி மூழ்குவார்?"

குறளை அனுபவித்துக்கொண்டிருப்பவர் அதனை அலசிக்கொண்டிருக்கமாட்டார். ஏன் அலசிப் பார்க்கலாகாது என்று தோன்றும். அதற்குக், குளத்தில் நீராடுவோர் அந்நேரத்தில் ஏன் நீர் பருகவில்லை என்று கேட்டுப் பார்க்கவேண்டும். தேவையில்லை, நீர் வேட்கையில்லை, எனவே குடிக்கவில்லை என்று அமைவோம். இதனையொப்பவே, அநுபவத்தில் தோய்ந்திருப்பதால் அறிவு முறையில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கமாட்டார் என்பது விளங்கப் பெறுவோம். அநுபவிப்போர்க்கு அந்நிலையில் ஆராய்ச்சித் தாகம் இராது. நீராடுதலால் உடம்பே குளிர்ந்திருக்கும்போது நாக்கு வறட்சி ஏது? உணர்வின்பத்தை நேரே அநுபவித்துக்கொண்டிருக்கும்போது எது கருதி அறிவாராய்ச்சி நிகழப்போகின்றது.

எல்லாவற்றையும் இப்படித்தான் அநுபவிக்கவேண்டும் என்று முன்னே பார்த்தோம். குறளை இப்படி அநுபவிக்கவேண்டுவது அவற்றுள் முதன்மையாகும்.

நீங்களனைவரும் அமைதியாக இருப்பதால் அநுபவித்துக்கொண்டிருக்கிறீர்களென்பது தெரிகின்றது. பிடிப்பு என்றேனே, அது, இத்தகைய அநுபவிக்கும் உணர்வுதான்!

இந்த அநுபவிக்கும் உணர்வுக்கு வேறொரு பேருண்டு; அதுதான் சான்றாண்மை என்பது! அநுபவிப்போர் சான்றோராவர். சான்றாண்மை என்பது நிறைதலுடைமை. இங்கே ஆண்மை என்பது வீரம் என்ற பொருளில் வரவில்லை. உடைமை என்ற கருத்தில் வந்தது. புல்லறிவாண்மை என்றபோதும் இப்படியே புல்லறிவுடைமை எனப் பொருளாயிற்று.

உடைமை என்று சொந்தமாக இருந்தால்தான் நன்றாக அநுபவிக்கலாம். அதாவது அநுபவிக்குங் காலத்தில் உள்ள நிறைவு பிற நேரங்களில் இராது. நிறைவின்றி, அநுபவமும் நேராது.

நாம் இன்று பேச எடுத்தது திருக்குறளின் உயிர்ப்பல்லவா? குறள் உயிர்ப்புடன் விளங்குகிறது. அதாவது உயிர்க்களையுடன் திகழ்கின்றது; மூச்சுவிடுகின்றது. அதன் மூச்சு உலகுக்கு நலம் தருகின்றது.

குறள் முப்பாலாக உள்ளது! முதலில் அறம்; அடுத்தது பொருள்; கடைசியிற் காமம் என்று. ஆனால் அநுபவிக்கும் முறையில் வைத்துப் பார்ப்போமானால் முதலில் பொருள்,

Telegrams: "RAMBROS"
**N. Ramu Bros;**
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

அடுத்தது காமம், முடிவில் அறம் என்றே அமையும். இதற்கும் அவரேதாம் வழிகாட்டியிருக்கின்றார், 'அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' என்ற குறளால் பொருள் கிடைத்தால் அது, அறன் தரும் இன்பமும் தரும் என்பதனால் முதலில் பொருளநுபவம் என்பது தெரிகின்றது; 'இன்பமும் ஈனும்' என்றதில் இன்பமும் என்னும் உம்மை இழிவு சிறப்பும் குறித்தலால், உயர்ந்தது அறமே என்பது பெறப்பட்டு, அற அநுபவம் முடிவுடையதாயிற்று. இன்ப அநுபவம் இடைநிலைய தென்பது இதனால் தெளியப்படும்.

பொருள் முதலில் வேண்டும்; பொருளில்லாமல் எதையும் செய்தல் இயலாது. பொருள் என்றாலே இயற்கைப் பொருள்தான். திருவள்ளுவர் சொன்னதும் அதுவே. செயற்கைப் பொருள் அப்புறம் வருவது.

இவ்வியற்கைப் பொருளையும் தொழில் செய்தே தேடவேண்டும். திருவள்ளுவர் தொழிலில் முதன்மையாக எடுத்தது உழவை. அதில் உழத்தல் என்ற பகுதி அமைந்துள்ளது. உழைப்பால் நடப்பது உழவு! உழவை முதன்மையாகக் கொண்டால் பிற தொழில்களெல்லாம் அதற்குத் துணையான தொழில்களாய் நிற்கும். இப்படியமைந்து விட்டால் உலகத்தில் பல சிக்கல்கள் நீங்கிவிடும். பொதுமை வளரத் தடையுமிருக்காது, அமைதி நிலைக்க வாய்ப்புமுண்டு.

இப்போதுள்ள உணவு நெருக்கடியெல்லாம் உழவைமறந்ததால் வந்ததே; அதாவது, சான்றாண்மை முறையில் பொருளநுபவம் கொள்ள விரும்பாமையால் வந்ததே என்பது!

ஆனால், மழையில்லாததால் வந்தது என்று ஒரு சாக்குச் சொல்லிவிடலாம். உழவை மறப்போர்க்கு மழை எதற்காகப் பெய்யவேண்டும்?

அம் மழை பெய்யாததற்கும் குறளிலேயே காரணம் பார்த்துவிடவேண்டும். மழைக்கென்றே திருக்குறளில் 'வான் சிறப்பு' என்ற ஓர் அதிகாரம் வைத்துள்ளார் ஆசிரியர். அதைக் 'கடவுள் வாழ்த்து'க்கு அடுத்தபடியாக வைத்துள்ளதால், எவ்வளவு முதன்மையாக அவர் அதனைக் கருதினார் என்பது தெரிகின்றது. விளங்காத தெய்வத்தை விளங்க வைப்பது மழையொன்றுதான் என்பதும் தெய்வத்தின் கொடையே மழை என்பதும் அவர் எண்ணம்; திருவருட் சம்மதத்தாலல்லது, மனிதர் முயற்சியால் உண்டாவதன்று மழை.

'வான்சிறப்பு' அதிகாரம் முழுவதிலும், மழையிருந்தால் எப்படியிருக்கும், மழை பெய்யாவிட்டால் என்ன நேரும் என்று தெரிவித்தாரே ஒழிய, மழையை வருவிக்கும் முறையொன்றும் சொன்னாரில்லை. வேண்டுமானால் பத்துக் குறளையும் வேகமாகப் பார்த்துவிடுவோம்.

முதற் குறளில் மழை அமிழ்தம் என்றார். அடுத்தபடி, அது உணவாகவும் உண்பொருள்களைத் தருவதாகவும் இருக்கின்றது என்றார். மூன்றாவது குறளில் மழை யில்லாவிட்டால் பசி வருத்துமெனவும், அடுத்ததில் உழவர் ஏர் உழார் என்றும் கூறினார். பின்பு, கெடுப்பதும் எடுப்பதும் மழையே என்றும், மழையில்லையேல் புல் கூடத் தோன்றாது, கடலும் தன் நிலையில் குன்றும், தானமும் தவமும் உளவாகா என்றெல்லாங் கூறி, இறுதிக் குறளில் மழையின்மையால் ஒழுக்கம் அதாவது நடைமுறையே இராதென முடித்தார். மழையை வருவிக்க வழி ஒரு குறளிலும் சொல்லவில்லை.

ஏன் அவர் சொல்லவில்லை என்று எண்ணுவோம். வேறிடங்களில் அது பற்றி வருகின்றது.

பாயிரம் விதைபோன்றது; நூல் அதிலிருந்து தோன்றி விரியும் மரமொப்பது!

பாயிரத்தின் முதலில், எளிதில் விளங்காத கடவுளைப் பற்றியும் அடுத்தபடி அக் கடவுளை விளங்க வைக்கும் மழையைப் பற்றியுங் கூறி உடனே நீத்தார் பெருமையைக் கூறுவதால், நீத்தாரே அம் மழையை வருவிப்பார் என்பதும், நீத்தார் பெருமையினைத் தொடர்ந்து அறன்வலியுறுத்தலை வைத்திருப்பதால் அவர் அறன்வலியாலேயே மழையை வருவிப்பார் என்பதுந் தெரிகின்றன.

நீத்தாரால்தாம் மழையை வருவிக்க முடியுமெனவே, மக்கள் நீத்தாராக, அதாவது சான்றோராக மாற வேண்டும் என்பது தெரிகின்றது. அனைவரும் மாறினால், இன்னும் நல்லதுதான்!

இந்திரன் மழைக்குத் தலைவன்; அவன் மேகங்களை இயக்குகின்றான் என்ற வழக்குண்டு. அந்த வழக்கைக் கொண்டே நந் தெய்வப் புலவர் "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான், இந்திரனே சாலுங் கரி" என்ற குறளால் 'நீத்தார் ஆற்றலுக்கு மழையே சான்று' என்று விளக்கியுள்ளார். நல்லவர்

இருப்பதால் மழை பெய்யுமென்ற இவ்வுண்மையையே மற்றொரு சான்றோராகிய ஔவையாரும், "......நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பதால் உறுதிப் படுத்தினர். சான்றோர் வாக்குகள் எப்போதும் ஒற்றுமையாகத்தான் இருக்கும்.

நீத்தார் என்பவர் ஆண் பெண் இருபாலிலும் இருத்தல் கூடும்; மாதர், இயல்பாகவே நீத்தாராய்த் திகழும் வாய்ப்புகள் உடையர்! கணவனிடத்தில் அன்புவைத்து அவற்காகத் தன்னையே துறக்கும் மாது, உண்மையில் நீத்தாராகவே உயர்ந்து வருதல் நேர்கின்றது!

ஆதலால் கற்புள்ள மாதராலும் மழை பொழியக் கூடும். "தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்னுங் குறளால் இதனை ஆசிரியர் எடுத்துக் காட்டினர். இக் குறளில், தெய்வமுந் தொழாது கணவனையுந் தொழுவாள் 'பெய்' யென்று சொல்லாமலே மழை பெய்யும் என்ற கருத்தும் உட்கிடையாக இருப்பது கருதற்பாலது. இதனால் தான் ஔவையாரும் நல்லார் ஒருவர் உளரேல் என்றார் அதாவது அவர் 'பெய்க' என்று சொல்லாவிட்டாலும் அவர் இருப்பதனாலே பெய்துவிடுபென்பது.

பெண்கள் நல்லவராய், நீத்தாராய் இருப்பதாலும், கணவனையுந் தெய்வத்தையுந் தொழுபவராய் இருப்பதனாலும் மழை தவறாது பெய்யும். சிக்கல்கள் குறைந்து அமைதி நிலைக்கும்.

இப்போது மழையில்லாததால், நீருக்காக எல்லாருக்கும் கவலையுடன் செலவும் நேர்கின்றது. இதற்கு என்ன செய்வது? எப்போதுமே பங்கீடு செய்து கொண்டிருக்க முடியுமா? அது, சரியாகத்தான் நடக்குமா?

அவரவரும் நல்லோராய் இல்லாததாலல்லவா முதலாளி–தொழிலாளி, ஆசிரியர்–மாணவர், குடிகள்–அரசினர் சச்சரவுகளும், குடும்பச் சச்சரவுகளும் மலிந்துள்ளன. அலுவலகங்களில் கடமையுணர்ச்சியோடு நடந்துகொள்ளாதவரால் எவ்வளவோ பழிபாவங்கள் தீமைகள் பெருகுகின்றன.

இனி, நல்லவர் என்றால் அவர் மேற்கொள்ளும் மந்திரமாக உள்ளது ஒன்று. அஃதே அறம்! எல்லாவற்றையும் விட மதிப்பு அதற்கே மிகுதி. கல்வி, அறிவு, பொருள் எல்லாம் ஆட்சிக்கு உள்ள வலிகள். இவையனைத்தும் அறத்து வலிபினை ஒவ்வா திருக்குறளின் பிழிசாறாக வுள்ளதும் இவ்வறமன்றோ!

திருவள்ளுவர் எக்காலத்துக்கும் ஒப்ப உண்மைகளைத் திட்டவட்டமாகச் சொன்னவர். தூய வாழ்விலிருந்துகொண்டு சொன்னவர். எல்லாராலும் சிறந்தவர் என்று பாராட்டப்பட்ட அவர், மரபுக்கு மாறாகாமலும் எளிய சொற்களைக் கொண்டும் வாழ்வின் பிழிவைத் தெளிவாக்கினார். இவருக்கு வந்த பேர் வேறியார்க்கும் இதுவரை வந்ததில்லை. எனவே உலக ஒளியாக விளங்குபவர் அவரே! மணிவாசகர், ஞானசம்பந்தர் எல்லாரும் பெரியோர் தாம் என்றாலும் இவரைப் போல் அவ்வளவு பெயர் வாங்கவில்லை. மேற் கூறியோர் வேறு வேறு நிலைகளில் புகழ் ஓங்கியவராக, நம பொய்யா மொழியாரோ, உண்மையியல்பு தெரிப்பவர் என்றே ஏத்தப்பட்டவர்! இவர் சொற்களைக் கேட்டு நடவாதவர் பின்பு வேறு யார் சொல்லைக் கேட்டு உய்யப்போகின்றனர்?

இத்தகைய வள்ளுவர், நாட்டைப்பற்றிச் சொல்லவந்தக்கால், 'தள்ளா விளையுளும் தாழ்விலாச் செல்வரும் தக்காரும் சேர்வது நாடு' என்று கூறினார். விளையுள் என்றதால் உழவரையும், செல்வர் என்பதால் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வாணிகம் செய்வாரையும், தக்கார் என்பதனால் இவர்க்கெல்லாம் மேலாய் இவரையெல்லாம் நன்னெறியிலே செலுத்துவாரான மேலோரையுங் குறித்தார். மூவரில் ஒருவரில்லாவிட்டாலும் நாடாகாதென்பது அவர் கருத்து.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

இப்போது அரசியலில் தக்காரைக் கவனிக்கின்றனரா?

உழவர் இத்தனை பேர், செல்வர் இவ்வளவினர் என்றெல்லாம் புள்ளிக் கணக்குகள் அரசியலாரிடம் இருக்கலாம். தக்கார் பட்டியல் உண்டா? தேடித் தொகுக்கவாவது முயல்கின்றனரா? ஆட்சி மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இது பற்றிச் சிறிதேனும் கவலை கொள்கின்றனரா?

சான்றோர் இருப்பால் மழை பெய்து உழவு சிறந்து பொருள் பெருகுமென்று பார்த்தோம். இனி நாட்டுப் புறத்திலே வாழ்பவர் கல்வி பெறுதற்காக நகரத்துக்கு வந்து, கற்றபின் நகரத்திலேயே தங்கி அலுவல் மேற்கொண்டு விடுவதாலும் உழவு கவனிக்கப்படாமற் போகின்றது. இப்படியில்லாமல் பெற்ற கல்வியோடு நாட்டுப் புறங்களுக்கே திரும்பிச் சென்றால் உழவைச் சிறப்பாகச் செய்யலாமே! யாரும் அடிமை வாழ்வு கூடாதென்று விரும்புகின்றனரா, உழவைவிட உரிமையான தொழில் ஒன்றுண்டோ?

பொருள் பெருக்குவது முதன்மை. அதனைக் கல்வி, அறிவு, செய்கைத்திறன், உழைப்பு, பக்கத் துணைகளோடு செய்வதே சிறந்தது. இதனால்தான் பொருட்பாலில் அங்கவியலொன்றும் வைத்தார்.

பொருளின் பயனாய்க் கலையும், கலையின் பயனாய் அருளும் வருவன. பொருள், கலைகளில் இழப்பு நேர்ந்தாலும் பரவாயில்லை. அருளைப் பெற்றுவிட வேண்டும். தேடிய தேட்டமும், கற்ற கல்வியும் என்றாவது ஒரு நாள் இழக்கற் பாலனவே. ஆதலால், இவற்றின் பயனான அருளைப் பெற்றுவிட்டால், இவற்றை இழந்தது குறித்து வருந்த மாட்டோம். கரும்பிலிருந்து சாறெல்லாம் எடுத்துக் கொண்டபின் சக்கையைப் பற்றி வருந்துவாருண்டோ?

ஆனால் பொருளையும் கல்வியையும் வைத்துக் கொண்டே அருளைப் பெறலாமென்றால் ஓரளவுதான் பெற முடியும்.

பண்டங்களை ஆய்வதே கல்வி, எனவேதான் கல்வியைப் பொருளதிகாரத்தில் வைத்தார். இக்கல்வி கலையாக மாற வேண்டும். பொருளாட்சியில் அரசன் தலைவன்; கலையில் உயர்ந்தது காதலை மிகுவிக்கும் அழகுக் கலை. இதனால்தான் கலைப் பாலாகிய காமத்துப்பாலில் காதலர் தலைவர்.

உடம்பு, சூழல், பண்டங்கள் தகுதியாகஇருந்தால் ஆண் பெண் அன்பு சிறக்கும். 'இல்லாளை இல்லாளும் வேண்டாள்' என்ற வாக்கு இங்கே நினைவு கூரத் தக்கது. பண்டங்களில் உணர்வு கலப்பதே கலை. அதாவது அழகியல்புகளைத் துய்ப்பதே கலையுணர்வு ஆணும் பெண்ணும் சேர்ந்து அநுபவிப்பதென்பது சோலை, வாவி, கடற்கரை போன்ற இயற்கை யெழில், உடல் உணர்வு எழில் நிலைகளேயேயல்லவா?

இனி இத்தகைய அநுபவிப்புகளிலும் பண்டங்களைப் பண்டங்களாகவே அநுபவிக்கும் உள்ளம் வேறு, பண்டங்களைக் கலை நோக்[illegible] உள்ளம் வேறு; [illegible] பற்றிய உள்ளத்தை மாற்றி உயர்த்[illegible] கலையுள்ளம் தோன்றிற்று. திருக்குறட் காமத்துப் பால், இக் கலையுணர்வைச் செழிப்பாக்கவே அமைந்தது.

சிறிது நேரத்திற்கு முன்னர் எங்கள் குருகுலத்தைப் பற்றிய சில செய்திகளை இந்தக் கழகத்தின் செயலாளர் உங்களுக்குப் படித்துக் காட்டியிருக்கின்றார். குருகுலம் திருக்குறளின் செயலகம்; திருக்குறளில் உள்ள ஒவ்வோர் அதிகாரத்துக்கும் ஒவ்வொரு ஏகர் நிலம் ஒதுக்கி அந் நிலப்பகுதியில் அவ்வதிகாரத்திற் கூறப்பட்டுள்ள கருத்துக்களின்படி செயல் செய்து காட்டுவது. இப்படி ஒரு நூலையே செயல் செய்து காட்டுகின்ற அமைப்பு உலகத்தில் எங்கும் என்றும் இருந்ததில்லை. காலஞ் சென்ற சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும் இதைப் பெரிதும் பாராட்டிக் கூறியதுண்டு.

குறளில் காமத்துப் பாலையும், பண்பளவாகவுள்ள இன்னும் பிற அதிகாரங்களையும் எப்படிச் செயற் படுத்துவது என்று சிலர் ஐயுறக்கூடும். இதிற் சிக்கல் ஒன்றுமில்லை. எடுத்துக்காட்டாக, குறிப்புணர்தல் என்ற அதிகாரத்தைச் செயற்படுத்த, வாலாற்றில் யார் யார் குறிப் புணர்ந்து நடந்து கொண்டனர், அதனால் அவர் பெற்ற பயன்கள் யாவை, குறிப்புணராது நடந்தவர்களுக்கு நேர்ந்த இழப்புகள் என்னென்ன என்பனவும், குறிப்புணரும் வகையும், விளைவுமெல்லாம் நூல் வடிவிலும் ஓவியக் கண் காட்சிகளாலும் உணர்த்தலாம்.

அது நிற்க, பண்டம்பற்றிய உள்ளத்திற்கும் கலையுள்ளத்திற்கும் உள்ள வேறுபாட்டுக்கு, நிகழ்ச்சி யொன்றை எடுத்துச் சொன்னால் விளங்கிவிடும். கவிஞர் தாகூர் ஒருகால் படகிற் சென்றுகொண்டிருந்தார். நேரம் மாலை. பகலவன் மறையுந் தருவாயானதால் வான முழுதும் செந்நிறமாய் இருந்தது இந்நேரத்தில் ஒரு பெரிய மீன் துள்ளிக் குதித்தது. பல நிறங்கள் விரிந்து இனிய காட்சியிருந்தது தெறித்த நீர்த்துளிகளில் அழகுகள் மின்னிப் பொலிந்தன. "ஆ! எவ்வளவு அழகு!" என்று வியந்தார் தாகூர். படகோட்டியும் அம்மீனைக் கவனித்தான். "எவ்வளவு பெரிய மீன்!" என்று ஏங்கினான் அவன். இருவர்க்கும் அநுபவத்தில் எவ்வளவு வேறுபாடு!

இந் நிகழ்ச்சியிற் படகோட்டியின் நினைப்பை ஒத்ததே பொருட்பால்; பண்டவுள்ளம்! கவிஞரின் அநுபவமே காமத்துப்பால்; கலையுள்ளம்! அதாவது பண்டங்களில் ஊடுருவி விளங்கும் உணர்வு அழகைத் துய்க்கும் உள்ளம்.

பண்டங்களையும் சூழவுள்ள பொருள்களையும் அப்படியே நுகர்வதைப் பார்க்கினும் அழகு செய்து கலையுணர்வோடு அநுபவித்தலே சிறந்த வாழ்வாகும். வீட்டைத் துப்புரவாக்கி ஒளி நிறைவித்துச், செடி கொடிகளாலும் பிறவற்றாலும் அழகு செய்து வைத்தால்தானே நாகரிகம் என்கின்றனர். அழகு செய்தால்தான் பண்டங்கள் நன்றாக அநுபவிக்கும் நிலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. குருகுலத்தில் இத்தகைய அழகுச் செய்கைகள் அவற்றிற்குரிய நிலப் பகுதியில், எழிலுணர்வு பொங்கக் கலைவிருந்தாகச் செயல் செய்யப்பெறும்.

இனி, இக் கலையுணர்வும் அழிவதொன்றே! மீன் எப்போதும் துள்ளிக்கொண்டிருக்குமா? எனவேதான் கலைக்குமேலும் நிலைத்த ஒன்று உளதாகின்றது. அதுவே நேர்மை! ஒழுங்கு! இவ்வொழுங்கினால்தான் கலையிலும் எழில்விளங்குகின்றது. ஒரு வெள்ளரிக்காயைப் பிளந்து பார்த்தால் அதில் விதைகள் எவ்வளவு ஒழுங்காக வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன! இத்தகைய ஒழுங்குமுறையே அழகு. இவ்வொழுங்கினை அநுபவிக்க அநுபவிக்க அங்கே தோன்றுவது அருள்! 'அருள்' என்ற பெயர் பிடிக்காதவர்கள் வேறு எப்பெயரையாவது சொல்லி அழைக்கட்டும், இழுக்கில்லை. பலகாலம் மரபாக வந்திருப்பதால் அப்பெயரை வழங்குவது எளிதாக இருக்கின்றது. அன்பு, இரக்கம் எல்லாம் இத்தகைய உணர்வு ஒழுங்குகளே.

உழவால் பொருள் பெருக, பொருட்பயனாய கலையால் உணர்வு மேம்பட, அருள் ஒழுங்கு சிறக்கின்றது.

இந்த அநுபவிப்புக்குத்தான் பேர், சான்றாண்மை! இச் சான்றாண்மைக்கு ஐந்து சால்புகள் தூணாகஉள்ளன. அதாவது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து களின் மேல் சான்றாண்மை மாளிகை எழுந்து விளங்குகின்றது. அன்பும் ஒப்புரவும் வாய்மையும் அறத்துப்பாலைச் சார்ந்தன. நாணும் கண்ணோட்டமும் பொருட்பாலுட் படுவன. மற்றொருவகையான நாண் காமத்துப் பாலைச் சார்ந்தது.

சான்றாண்மை இருந்து விட்டால் மேற்கூறிய ஐந்து பண்புகளும் இருக்கும். சான்றாண்மை பெருந்தன்மை; குணப் பண்பு. சான்றாண்மையியக்கம் நல்லோரைப் பெருக்குவது. குணந்தான் சான்றோர்க்கு அணிகலன்; 'குணநலன் சான்றோர் நலனே' என்பது குறள். குணமென்னுங் குன்றேறி நின்றாரே சான்றோர். 'குணக்கு' என்றசொல்கிழக்காகிய கீழ்த்திசை; எனவே, குணமுடையார் கீழ்ப்படிதலுடையார் என்பது பெறப்பட்டது. அதாவது மிக எளியார்க்கும் இறங்கி வந்து உதவுவோர் என்பது.

ஆக, திருக்குறளின் உயிர்ப்பாக (மூச்சாக) இருப்பது சான்றாண்மை! அதாவது, நீத்தார் பெருமை! வேறு என்னை யாராவது சொல்ல முடியுமா? அப்படிச் சொல்ல முன்வந்தால் அதற்கு இத்தனை நலங்களும் அமைந்திருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்ப்போம். அப்படி யாரும் முன்வராவிட்டால் இதனையே திருக்குறளின் உயிர்ப்பாக ஓம்பி வருவோம்.

இந்த உயிர்ப்பு எங்கும் பரவி நிலைபெறுக என்று இத் தலத்தில் திருமுன்னிலையில், தியானித்து என் சிற்றுரையை முடித்துக் கொள்கின்றேன்.

—த. ஆறுமுகம்.

# * பணிசெய்ய வாரீர்! *

(முத்துசாமி)

"வித்தகம் பேச வேண்டாம் பணி செய்ய வாரீர்" என்ற இறைவன் சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பார்த்து அழைத்ததாகச் சேக்கிழார் கூறியிருக்கிறார். அதே போன்றதொரு அழைப்புக் குரல் இப்பொழுது மதுராந்தகத்தை யடுத்த மாம்பாக்கத்திலிருந்து ஓர் அருளாளர் வாக்கிலிருந்து எழுகின்றது! "வித்தகம் பேசி வீண் காலம் கழிக்கவேண்டாம். பணிசெய்ய வாரீர்" என்ற அழைப்புக் குரலே அது!

எந்த வேலை தொடங்குவதற்கும், அடிப்படையில் சில முன் வேலைகள் நடந்து அதன் பின்னர் செயல் தொடங்கவேண்டும். அவ்வடிப்படையாவன: ஆழ்ந்த எண்ணமும், அதனைப் பற்றிச் சம்பந்தப்பட்டோரிடம் கலந்து உரையாடி ஆய்தலும். இவ்விரண்டும் நடந்தபின்னர் செயல் நடைபெறும். எண்ணிய எண்ணம் பேச்சில் சிறந்து வடிவம் அடைந்து செயலில் நிறைவடைந்த வடிவுகொண்டு எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

மனம் வாக்கு காயம் மூன்றும் சம்பந்தப்பட்டு ஒரு வேலை நடக்க வேண்டி யிருக்கிறது. செயலுக்கு வாராத எண்ணமும் பேச்சும், குறை மாதங்களில் முழுவடிவம் பெறாமலேயே சிசு அழிந்து விடுவதை யொக்கும். (சான்றோர்கள் செய்யத் தக்கவைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு பெயர் கொடுத்தார்கள். அது அறம் என்பது. அங்ஙனமாயின் செய்யத் தகாதன மறம் என்பதாயிற்று.

தொகுத்து அறம் என்று கூறிய அவர்கள் அதனை வகுத்தும் விரித்தும் விளக்கி மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றனர். அவ்வாறு எடுத்துகூறியவற்றில் முதன்மையானது, சிறந்தது திருக்குறள்! திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கும் நூற்று முப்பது மூன்று செய்திகளே அறம் எனப்படுவன. இவற்றைத் தவிர்த்து வெளியே அறம் என்று பெயர் பெறத்தக்கது ஒன்றுமில்லை. உலகில் எந்த அறமானாலும் இவைகளில் ஏதேனும் ஒன்றில் அடங்கிவிடும்.

இந்த நூற்று முப்பத்து மூன்று அறங்களும் செயல்பட்டு விட்டால் அறம் முழுமையும் செயல்பட்ட மாதிரியாகும். ஒளி தோன்றினால் இருள் தானே யொழிந்து விடுவது போல அறம் ஓங்கினால் மறம் தானே அழிந்துவிடும். நாத்திகத்தை ஒழிப்பது என்பதும் ஒரு அறம், ஆதலால் அது திருக்குறளில் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து நன்றாய்ச் செயல்படும்போது தானே யொழிந்து விடும்.

திருக்குறளைப் பற்றி நன்றாய் அறிந்துகொண்டவர்கள் என்று சொல்லப்படுவோரும் அந்நூலைப் பற்றிப் பேசுவதோடு பெரும்பாலும் நின்று விடுகின்றனர்! அதில் கூறியவைகளைச் செயற்படுத்துவதில்லை. திருக்குறளிற் சொல்லப் படுவன அறங்கள் என்று விளக்கிக் கூறுவர். 'செயற்பால தோரும் அறனே' என்ற குறளை அழகாக எடுத்துக் காட்டுவர். அறத்தைச் செய்ய விரும்பும்படி ஒளவையாரும் கூறியிருப்பதாக ஒப்புமை காட்டுவர். கேட்கிற மக்களும், அறம் என்பது எண்ணுதற்கும் பேசுதற்கும் மட்டுமே உரியதன்று; இவ்விரண்டோடும் செய்வதற்கும் உரியது என்று நன்றாய் உணரும்படி பேசுவர். ஆனால் செயல் ஒன்று நடவாது. இதுதான் திருக்குறள் தோன்றிய நாள்முதல் இதுவரை நாம் பெரிதும் காண்பது!

(வரும்)

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கரி எடுப்பை விரைவில் தொடங்கிவிட வேண்டும். சேலம் மாவட்டத்து இரும்பு கவனிக்கப் படாமல் இருந்து வருகிறது.

உற்பத்தி அமைச்சர் திரு. கெ. ஸி. ரெட்டி இரும்புப் பொறி அமைக்க ஜெர்மன் கம்பெனியாரோடு கூட்டக ஆட்சி செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றித் தெரிவித்ததில், 5 நூறாயிரம் டன் இரும்பை எடுக்கக் கூடிய இரண்டாவது பொறியைத் தெற்கே அமைக்கக் கூடுமென்று கூறியிருக்கிறார். அது, சேலத்தில் அமைக்கப் படவேண்டும். சென்னை ஆட்சி தமது திட்டத்தை அனுப்பும்போது இதன் உடனடியான தேவையை வலியுறுத்திப் புதிய ஆலைகளை உண்டாக்கி வேலையில்லா மக்களுக்குப் பல துறைகளில் வேலைகளை உண்டாக்குமென்று நம்புகிறோம். தமிழர்களின் வேலையில்லா நிலைமை உழவை விட மற்றத் தொழில் வளர்ச்சிகளால் மட்டும் தான் மாறக் கூடியதாய் உள்ளது.

—மெய்கண்டான்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)